இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 04-11-2024

# இலங்கையிடம் இந்தியாவின் கோரிக்கை!

**“மீனவர்களுக்கு எதிராகப் படைபலத்தைத் தவிர்க்க வேண்டும்” - என இலங்கையிடம் இந்தியா கோரிக்கை வைத்துள்ளது. இனியாவது இலங்கை, இதனைக் கேட்டுச் செயல்பட வேண்டும்.**

எல்லை தாண்டி மீன்பிடிப்பதாகச் சொல்லி தமிழ்நாட்டு மீனவர்களைக் கைது செய்வதும், அவர்களைத் தாக்குவதும், வலைகளை அறுப்பதும், படகுகளை உடைப்பதும் இலங்கைக் கடற்படையால் தொடர்ந்து நடத்தப்படும் கொடுஞ் செயல்களாக அமைந்துள்ளது. எதைக் கேட்டாலும், ‘எல்லையைத் தாண்டி வந்தார்கள்’ என்று சொல்வதை வழக்கமாக வைத்துள்ளார்கள்.

**ஒரு வாரத்துக்கு முன்பு கூட 16 மீனவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டார்கள். 128 மீனவர்கள் இப்போது இலங்கை சிறையில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டு மீனவர்களின் 199 படகுகள் அந்த நாட்டின் வசம் உள்ளது. இந்த ஆண்டு மட்டும் 482 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கடந்த 50 நாளில் மட்டும் 100 பேர் கைதாகி இருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் இதனை ஒன்றிய அரசின் கவனத்துக்கு எடுத்துச் சென்று வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

இலங்கை கடற்படை அடங்கவில்லை. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னதாக தமிழீழப் போராளிகளுக்கு உதவுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்காக டீசல் கடத்தி வருவதாகச் சொன்னார்கள். அதையே போர் முடிந்த பிறகும் இலங்கை அரசாங்கம் சொல்லி வந்தது. இன்னும் சொன்னால், 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு தாக்குதல் அதிகம் ஆனது. 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு இன்னும் அதிகம் ஆனது.

இலங்கையில் நிலையான அரசுகள் அமைந்திருந்த போதுதான் இவை நடந்தன என்றால், பலவீனமான அரசுகள் ஆட்சியிலும் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது மட்டும் நிலையாக நடைபெற்றன. ஆட்சிகள் மாறினாலும், படைகள் ஒன்றுதான் என்பதைப் போல அவை நடந்தன. இரண்டு மிகப்பெரிய வலது சாரி கட்சிகளின் அரசுகள் மாறி மாறி ஆட்சியில் இருந்தன. எந்த ஆட்சி மாற்றம் இலங்கையில் நடைபெற்றாலும் மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்தது. இப்போது இலங்கையில் இடதுசாரி கட்சிகளின் கூட்டணி, ஆட்சிக்கு வந்துள்ளது. இனியும் இவை தொடரலாமா? இந்திய மீனவர்களைக் காக்கும் கடமை, இலங்கை அரசுக்கும் இருக்கிறது.

**இந்தியாவைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு முறை மீனவர்கள் கைது செய்யப்படும் போதும் கண்டிக்கும். அந்த அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும். அந்த மீனவர்கள் விடுதலை ஆனதும் அமைதியாகி விடும். ‘இந்தியாவில் பலவீனமான மன்மோகன்சிங் ஆட்சியில் இருப்பதால்தான் அண்டை நாடுகள் பயப்படவில்லை’ என்று பிரதமர் ஆவதற்கு முன்னால் நரேந்திரமோடி சொன்னார். அவர் ஆட்சிக்கு வந்த 11 ஆண்டுகளிலும் மீனவர்களைத் தாக்கும் கொடூரமான செயல்களை இலங்கை தொடர்ந்து வந்தது. மீனவர்களை அவர்கள் கைது செய்வார்கள். வழக்கம் போல இவர்கள் கடிதம் அனுப்புவார்கள். அவர்கள் விடுதலை செய்வார்கள். அதோடு பிரச்சினை அமுங்கிவிடும். நிரந்தரத் தீர்வை உருவாக்குவதற்கான பேச்சுகளை நடத்தவில்லை பா.ஜ.க. அரசு.**

இந்தியா - இலங்கை கடல் எல்லைப் பகுதியில் மீன்பிடிப்பது தொடர்பாக நீண்ட காலம் நீடித்து வரும் பிரச்சினைகளைக் கையாள இருநாட்டு அதிகாரிகள் இடம் பெற்றுள்ள கூட்டுப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் மட்டத்திலான கூட்டுப் பணிக்குழுவுக்கு என்ன அதிகாரம் இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இருநாடுகள் தொடர்புடைய பிரச்சினையாக இருந்தால் இருநாட்டு அதிபர்கள் கொண்ட குழுவை அமைத்திருக்க வேண்டும். அல்லது இருநாட்டு வெளியுறவு அமைச்சர்கள் கொண்ட குழுவை அமைத்திருந்தால்தான் அது அதிகாரம் பொருந்திய அமைப்பாக இருந்திருக்க முடியும். அதையும் செய்யவில்லை.

இருநாட்டு அதிகாரிகள் கொண்ட கூட்டுப் பணிக்குழுவாவது அடிக்கடி கூடியதா என்றால் இல்லை. அவசர காலத்திலாவது கூடியதா என்றால் அதுவும் இல்லை. இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு அக்டோபர் 30 ஆம் தேதியன்று கூடியிருக்கிறது. இருநாட்டு மீன்வளத் துறை அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்கள். இருநாட்டு வெளியுறவு துறை அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளார்கள்.

கொழும்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பங்கேற்ற இந்திய மீன்வளத் துறை செயலாளர் அபிலக்ஷ லிகி, “மீனவர்களுக்கு எதிராக எந்த சூழ்நிலையிலும் படைபலத்தை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்” என்று சொல்லி இருக்கிறார். மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண வேண்டும் என்றும், இருதரப்பினரும் ஒத்துழைத்தால் மட்டுமே அமைதியான சூழல் நிலவும் என்றும் இக்கூட்டத்தில் இந்தியா சார்பில் சொல்லப்பட்டுள்ளது.

இலங்கை சிறையில் உள்ள இந்திய மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும், அவர்களது படகுகளையும் விரைவில் விடுவிக்க வேண்டும் என்று இந்தியா சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மீனவர்களைக் கைது செய்வது, கடும் தண்டனை வழங்குவது, அதிகப்படியான அபராதங்களை விதிப்பது ஆகிய அனைத்தையும் தவிர்க்க வேண்டும் என்றும் இந்தியா கோரிக்கை வைத்துள்ளது. இருநாட்டு மீனவர் சங்கங்களின் பேச்சுவார்த்தைகள் தொடங்க வேண்டும் என்பதையும் இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இருநாட்டு மீனவர் சங்கங்களின் கூட்டத்தை இந்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.

**இப்போது தொடங்கிய பேச்சுவார்த்தை இனி தொடர்ந்து நடைபெற வேண்டும். இது அதிகாரிகள் மட்டத்திலானதாக முடிந்துவிடாமல் இருநாட்டு அமைச்சர்கள் சந்திப்பாக மலர வேண்டும். இருநாட்டு பிரதமர்களும் இது குறித்து மட்டும் பேசுவதற்கான சந்திப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அது நடந்தால்தான், இந்திய அரசு தமிழ்நாட்டு மக்களை மதிப்பதாகக் கருத முடியும். இலங்கை அரசையும் இடதுசாரி அரசாகக் கருத முடியும்.**

## வைகை அணையின் நீர்மட்டம் உயர்வு!

*தேனி, நவ. 4-*

*நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் தேனி மாவட்டம் வைகை அணை நீர்மட்டம் 61.15 அடியை எட்டியது.*

*71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் தற்போது 61.15 அடியை எட்டியது.*

*வைகை அணைக்கான நீர்வரத்து 904 கனஅடியில் இருந்து 2,120 கன அடியாக அதிகரித்துள்ளது.*



ஆஸ்திரேலியா நாட்டின், சிட்னி நகரில் நடைபெறவுள்ள 67வது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் கலந்து கொள்ள செல்லும் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களை நேற்று முன்தினம் (02.11.2024) விமான நிலையத்தில் சட்டமன்ற முதன்மைச் செயலாளர் கி.சீனிவாசன் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.

‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களின் நிலைகுறித்து

# கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

## நவ. 5, 6 தேதிகளில் நடைபெறுகிறது!

**சென்னை, நவ. 4-**

**திராவிட மாடல் அரசின் திட்டங்களின் நிலைகுறித்து கோவையில் வருகிற நவம்பர் 5 மற்றும் 6 ஆகிய இரு தேதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு நடத்துகிறார். அதைத் தொடர்ந்து மற்ற மாவட்டங்களில் கள ஆய்வை நடத்தப் போவதாகவும் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.**

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில்,

“அமெரிக்கப் பயணத்திற்கு முன்பாகவே நான் கேட்டுக் கொண்டபடி, அமைச்சர்கள் பலரும், அவரவர் துறை சார்ந்த மற்றும் மாவட்டங்களில் உள்ள பணிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை அளித்திருந்தனர்.

எதிர்வரிசையிலே இருப்பவர்கள், திராவிட மாடல் அரசு மீது அடிப்படையில்லாத அவதூறு களைப் பரப்ப முனைந்து, அதிலும் முனை முறிந்து போயிருக்கிறார்கள்.

திராவிட மாடல் அரசு தனது திட்டங்களை முழுமையாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கை யுடன் உள்ள தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற் றும் வகையில், பண்டிகை நாட்கள் முடிவடைந்த பிறகு, நவம்பர் 5, 6 தேதிகளில் கோவைக்குச் சென்று கள ஆய்வினைத் தொடங்க இருக்கிறேன்.

மற்ற மாவட்டங்களிலும் தொடரவிருக்கிறேன். **கள ஆய்வும் தொடரும், திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களும் தொடரும்!**

“அரசு சார்ந்த பணிகளை மட்டும் தான் கவனிப்பீர்களா?” என்று உடன்பிறப்புகளான உங்களின் மனக்குரலை ‘உங்களில் ஒருவனான’ நான் அறிவேன். கள ஆய்வுப் பணிகளை அந்தந்த மாவட்டங்களில் நிறைவு செய்தபிறகு, கழகப் பணி களையும் ஆய்வு செய்வேன்.

கண்மணிகளாம் உடன்பிறப்பு களையும் நேரில் கண்டு நெஞ்சம் மகிழ்வேன்!”

- என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்தார்கள்.

தமது இவ்வறிவிப்புக்கொப்ப, திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப் படும் திட்டங்களின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்திட கோவையில் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

டி.பி.எம்.மைதீன்கான் தலைமை! சூ.அருள்மணி ஏற்பாட்டில்

## மானூர் கிழக்கு ஒன்றியத்தில் மகளிர் பங்கேற்ற மின்னொளி கபடி போட்டி!

### மாலைராஜா - சு.சுப்பிரமணியன் - முன்னணியினர் பங்கேற்றனர்!

*நெல்லை, நவ.4 -*

*முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சூ.அருள்மணி ஏற்பாட்டில் கங்கைகொண்டான் அனைத்தலையூரில் மாநில அளவிலான முதல் ஆண்டு மகளிருக்கான மின்னொளி கபடி போட்டி நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் பங்கேற்று துவக்கி வைத்தார்.*

*நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றியம் கங்கை கொண்டான் அனைத்தலையூரில் முதல் ஆண்டு மாநில அளவில் மகளிருக்கான மின்னொளி கபடி போட்டி 02.11.24, 03.11.24 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.*

*இதில் முதல் நாள் நிகழ்வு (2ம்தேதி) நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், நெல்லை தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி செயலாளர் ச.முத்துச்செல்வி, மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ், கிரிஜா குமார், தெற்கு ஒன்றிய செயலாளர் மாரியப்பன், பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம் (நெல்லை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.க.மணி வரவேற்புரையாற்றினார்.*

*அதனை தொடர்ந்து வீரர்கள் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கானுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். பின்னர் போட்டியை அவர் துவக்கி வைத்தார்.*

*இந்த நிகழ்வில் பொதுக் குழு உறுப்பினர் பி.எம்.சரவணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன், மிக்கேல், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அனித்தா, கீர்த்தி, பிரபா அருள்மணி, சந்திரன், சித்திரை உள்பட கழகத்தினர், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.*

*முன்னதாக விழா மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

*நிகழ்வின் நிறைவு விழா போட்டி நேற்று 3 ம் தேதி நடைபெற்றது.*

## காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை!


*மேட்டூர், நவ. 4 -*

*தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலமான ஒகேனக் கல்லுக்கு கர்நாடகம், ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள். அவர்கள் அருவியில் குளித்தும், பரிசலில் சென்றும் மகிழ்ந்து செல்வர். இதனிடையே தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தேன்கனிக் கோட்டை, அஞ்செட்டி, பிலிகுண்டுலு, ராசி மணல் உள்ளிட்ட இடங்களில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது. இதனால் 6,500 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 14 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.*

*விடுமுறை தினமான நேற்று ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். முதலைப் பண்ணை, சிறுவர் பூங்கா உள்ளிட்ட பகுதிகளை சுற்றி பார்த்தனர். சுற்றுலா பயணிகள்குடும்பத்தினருடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். பின்னர் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்றவாறு காவிரி ஆற்றை கண்டு ரசித்தனர்.*

*இளைஞர்கள் எண்ணெய் மசாஜ் செய்துமெயின் அருவியில் குளித்தும், பெண்கள் காவிரி ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். குடும்பத்துடன் பூங்காவில் அமர்ந்து உண்டு மகிழ்ந்தனர். சாலையோரம் இருந்த கடைகளில் பொறித்து வைத்த மீன்களையும் ஆர்வமுடன் வாங்கி சாப்பிட்டனர்.*

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; “இந்தி மீது வெறுப்பு இல்லை” என்று நமது துணை முதல்வர் உதயநிதி, கேரளாவின் கோழிக்கோட்டில் பேசியிருக்கிறாரே ?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; “திராவிட இயக்கம் இந்தித் திணிப்பைத்தான் எதிர்த்ததே தவிர, தனிப்பட்ட முறையில் இந்தி என்கிற மொழி மீது எங்களுக்கு வெறுப்பு கிடையாது” என்று, இந்தி மொழி பற்றிய நமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியே அவர் பேசியிருக்கிறார்.**

**இந்தி மட்டுமல்ல எந்த மொழி மீதும் எங்களுக்கு வெறுப்பில்லை; எந்த மொழிக்கும் நாங்கள் எதிரானவர்கள் இல்லை - என்று 1966லேயே பேரறிஞர் அண்ணா பிரகடனப் படுத்தி இருக்கிறார்.**

**பின்னர் ஏன் ‘ இந்தி ஒழிக! ‘ என்று முழக்கமிடுகிறீர்கள் என்று கேட்டதற்கு, ‘வெள்ளையனே வெளியேறு’ என்று அண்ணல் காந்தி சொன்னார். வெள்ளையர் என்ற இனத்தின் மீது காந்திக்கு எப்போதும் வெறுப்பு இருந்ததில்லை; வெள்ளையர் ஏகாதிபத்தியத்தைத்தானே அவர் எதிர்த்துப் போராடினார்! - என்று அண்ணா விளக்கம் சொன்னதெல்லாம் வரலாற்றுப் பதிவு.**

**அண்ணா அவர்களின் நிலைப்பாட்டை ஒட்டியே, உதயநிதி கோழிக்கோட்டில் பேசியிருக்கிறார்.**

**உதயநிதியின் பேச்சு, வரலாற்றின் தொடர்ச்சி !**